பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

11 04 2025
வெள்ளிக்கிழமை

12 40
பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று வாரணாசியில் மூவாயிரத்து 880 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
2. இந்தியாவில் மின்சார வாகன தயாரிப்பு உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்ய வருமாறு ஆஸ்திரியா தொழில் துறையினருக்கு மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அழைப்பு விடுத்துள்ளார்.
3. இந்தியா - இத்தாலி இடையேயான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
4. கூடுதல் வரி விதிப்பு தொடர்பான அணுகுமுறையை அமெரிக்கா மாற்றிக் கொண்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி, உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் மூவாயிரத்து 880 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

வாரணாசியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கிராமப்புறங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள 130 குடிநீர் திட்டங்கள், 100 புதிய அங்கன்வாடி மையங்கள், 356 நூலகங்களை பிரதமர் தொடங்கி வைத்தார்.

பிந்த்ரா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் அரசு கலைக் கல்லூரியையும் அவர் திறந்து வைத்தார்.

ராம்நகர் காவல்துறை வளாகத்தில் காவலர்களுக்கான விடுதியையும்பிரதம் திறந்து வைத்ததுடன், 70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான ஆயுஷ்மான் சுகாதார காப்பீடு அட்டைகளையும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், கடந்த பத்து ஆண்டுகளில் வாரணாசி தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் வேகம் பெற்றிருப்பதாக கூறினார்.

காசி தற்போது பூர்வாஞ்சல் பகுதியின் பொருளாதார மையமாக உருவெடுத்திருப்பதுடன் அப்பகுதியில் போக்குவரத்து இணைப்பு வசதிகள் மேம்பட்டிருப்பதுடன் அனைத்து வீடுகளுக்கும் குழாய் வழி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா சென்னையில் இன்று முதுபெரும் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் மறைவையொட்டி, அவரது மகளும் பிஜேபி மூத்த தலைவருமான திருமதி தமிழிசை சௌந்தரராஜன் இல்லத்திற்கு சென்று குமரி அனந்தனின் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் மற்றம் குடும்பத்தினருக்கு திரு அமித்ஷா ஆறுதல் கூறினார்.

**[]<<<>>>[]**

இந்தியாவின் மின்சார வாகனங்கள், சிப் தயாரிப்பு மற்றும் நிதி தொழில்நுட்ப துறைகளில் முதலீடு செய்ய வருமான ஆஸ்திரியா தொழில் துறையினருக்கு மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அழைப்பு விடுத்துள்ளார்.

வியன்னாவில் அந்நாட்டு நிதி அமைச்சர் திரு மார்க்கஸ் **Marterbauer** -ஐ சந்தித்து பேசிய அவர், இந்திய பொருளாதாரம் குறித்தும், மத்திய அரசு மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் குறிதது எடுத்துரைத்தார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக ஒத்துழைப்புகளை மேம்படுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக தேசிய முதலீடு மற்றும் கட்டமைப்பு நிதியத்தின் வாயிலாக முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்றும், அடுத்தக்கட்ட பேச்சுவர்த்தை நடத்துவதற்காக இந்தியா வருமாறும் ஆஸ்திரியா நிதி அமைச்சருக்கு, திருமதி நிர்மலா சீதாராமன் அழைப்பு விடுத்தார்.

**[]<<<>>>[]**

உலகளாவிய சவால்களுக்கு இடையிலும் இந்தியா - இத்தாலி இடையேயான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இத்தாலி - இந்தியா வர்த்தக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைப்பின் நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடியும், இத்தாலி பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனியும், கடந்த ஆண்டு வெளியிட்ட கூட்டு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த இரு நாடுகளும் உறுதிபூண்டிருப்பதாகக் கூறினார்.

இந்த பணியில் இத்தாலி – இந்தியா வர்த்தக அமைப்புக்கு சிறந்த வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் புதுமை கண்டுபிடிப்பு உள்ளிட்ட துறைகளில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் இருதரப்பு ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சமூக சீர்திருத்தவாதி ஜோதிராவ் பூலே-யின் பிறந்த நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இது குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் மனித குலத்தின் உண்மையான சேவகரான ஜோதிராவ் பூலே, தமது வாழ்நாள் முழுவதையும் நலிந்த பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தவர் என புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது அளப்பரிய பங்களிப்பு அனைத்துத் தலைமுறையினருக்கும் தொடர்ந்து ஊக்கம் அளிக்கும் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தலைசிறந்த கல்வியாளரும், சிந்தனையாளருமான ஜோதிராவ் பூலே, ஷெடியூல்டு மற்றும் பிற்படுத்தப்பட்ட சமதாயத்தினரின் முன்னனேற்றத்திற்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்று கூறியுள்ளார்.

கல்வி, சமத்துவம் மற்றும் சம நீதியின் மூலம் சமூக மாற்றத்திற்கு அடித்தளமிட்ட ஜோதிராவ் பூலேயின் வாழ்க்கை அனைவருக்கும் முன்மாதிரியாக உள்ளது என்றும் திரு அமித்ஷா குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன், சாதிய பாகுபாட்டிற்கு எதிராக தீவிரமாக போராடிய ஜோதிராவ் பூலே, கல்வி மற்றும் மகளிருக்கு அதிகாரம் அளிப்பதற்காக பாடுபட்டவர் என்று தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் காட்டிய சமூக நீதிப்பாதை நம் அனைவருக்கும் தொடர்ந்து வழிகாட்டுவதாக இருக்கும் என்றும் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியா - ஸ்லோவாக்கியா இடையேயான நட்புறவை வலுப்படுத்துவதில் இந்திய வம்சாளியினரின் பங்களிப்பு அளப்பரியது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்,

**Bratislava** நகரில் ஸ்லோவாக்கியா நாட்டிற்கான இந்திய தூதர் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் இந்திய வம்சாவளியினிடையே உரையாற்றிய குடியரசுத் தலைவர், ஸ்லோவாக்கியாவின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் இந்திய சமூகத்தினரின் கடின உழைப்பு மற்றும் பங்களிப்பை அந்நாட்டு தலைவர்கள் பாராட்டியது தமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறினார்.

இந்திய வம்சாவளியினரின் வளர்ச்சி சமுதாயத்தின் அனைத்து தரப்பினரின் நலனையும் உறுதி செய்வதாக உள்ளன என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக திருமதி திரௌபதி முர்மு-வுக்கு ஸ்லோவாகியாவின் நித்ரா நகரில் உள்ள கான்ஸ்டன்-டைன் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

வரலாற்று சிறப்புமிக்க நித்ரா நகரில் உள்ள ஜாகுவார் லேண்ட் ரோவர் கார் தொழிற்சாலையை பார்வையிட்ட குடியரசுத் தலைவர், அங்குள்ள பூங்கா ஒன்றில் அந்நாட்டின் தேசிய மரமான லிண்டன் மரக்கன்றையும் நட்டு வைத்தார்.

**[]<<<>>>[]**

தமிழக வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி திமுக துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அந்த பொறுப்பு கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக உள்ள திரு திருச்சி சிவா-வுக்கு வழங்கப்பட்டுள்ளதாக திமுக-வின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்பின் கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கைகளின் பாதிப்புகளை உணர்ந்ததன் காரணமாக அந்நாடு தற்போது தனது அணுகுமுறையை மாற்றிக் கொண்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்,

புதுதில்லியில் நடைபெற்ற தொழில்நுட்ப மாநாட்டில் பேசிய அவர், அமெரிக்கா தற்போது பல்வேறு நாடுகளுடனும் பேச்சுவா ர்த்தை நடத்தி வருவதாகக் கூறினார்.

அமெரிக்காவை பெரிய பொருளாதார நாடாக மாற்றியதில் தொழில்நுட்பம் பெரும் பங்கு வகித்திருப்பதை சுட்டிக்காட்டிய திரு ஜெய்சங்கர், வரி விதிப்பு நடவடிக்கைகளால் பாதிப்பு ஏற்படும் சூழலை அமெரிக்கா உணர்ந்திருப்பதாக தெரிவித்தார்.

இதனிடையே அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு யாருக்கும் பயனளிக்கப் போவதில்லை என இங்கிலாந்து பிரதமர் திரு **Keir starmer** தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பிரதமர் திரு **shigeru ishiba**-வுடன் ஆலோசனை நடத்திய பிறகு திரு **Keir starmer** இதனைத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இந்தியாவில் செல்போன்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் பண பரிவர்தனை 41 சதவீதம் உயர்ந்து 2024-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 88 புள்ளி ஐந்து நான்கு பில்லியனாக அதிகரித்துள்ளதாக வோல்டு லைன் இந்தியாவின் டிஜிட்டல் பண பட்டுவாடா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் டிஜிட்டல் பண பரிவர்தனைக்கான கட்டமைப்பு வசதிகள் பெரும் வளர்ச்சி பெற்றிருப்பதே இதற்குக் காரணம் என கூறப்பட்டுள்ளது.,

குறிப்பாக யு பி ஐ – க்யூ ஆர் கோடு வாயிலாக மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் கடந்த டிசம்பர் மாத இறுதியில் 63 கோடியே 34 லட்சத்தை எட்டியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தொவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

திருவனந்தபுரம் விமான நிலையம் இன்று மாலை மணி 4-45 முதல் இரவு ஒன்பது மணி வரை இயங்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம் அனந்தபத்மநாதசுவாமி கோவில் பயிங்குனி ஆராட்டு திருவிழாவையொட்டி பாரம்பரியமாக கடைபிடிக்கப்படும் நடைமுறையின் அடிப்படையில் விமான போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியின் ஆடவர் குழுப் விரிவில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவின் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தீரஜ், அட்டானு, தருண்தீப் ஆகியோரைக் கொண்ட குழு 6-2 என்ற புள்ளி கணக்கில் ஸ்பெயினை வென்றது.

***End of News***